# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை – 2021 சனவரி

## (201) உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும்

## பகுதி A

**வினா இல. 01**

இது 25 புள்ளிகளுக்கான ஒரு கட்டாய வினாவாகும். புதிய பாடத்திட்டத்தின் கீழ், உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும் என்ற பாடம் தொடர்பான அறிவு இங்கு பரீட்சிக்கப்பட்டது. மிகச் சில பரீட்சார்த்திகள் மாத்திரமே இப்பகுதிக்கு முழுப் புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்ததுடன் அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு 10 – 25 புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

விடைகளை மதிப்பீடு செய்யும்போது அவதானிக்கப்பட்ட பொதுவான பலவீனங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

**1.1** நிதிக் கூற்றின் ஆக்கக்கூறுகள் பற்றி கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியாக விடை அளித்திருந்ததுடன் சில பரீட்சார்த்திகள் விடையளிக்கத் தவறியிருந்தனர்.

**1.2** சொத்து அகற்றல் (விற்பனை) செயன்முறை மற்றும் விற்பனை மீதான இலாபம் அல்லது நட்டத்தை எவ்வாறு கணிப்பிடுவது என்பது பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்ததுடன் சில பரீட்சார்த்திகள் விடையளிக்கத் தவறியிருந்தனர்.

**1.3** இவ்வினா வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்ததுடன் சில பரீட்சார்த்திகள் விடையளிக்கத் தவறியிருந்தனர்.

**1.4** இங்கு மறு கட்டளை மட்டத்தை (ROL) கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது. ROL பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு திருப்திகரமானதாக இருந்தது. இந்த வகையான கணித்தல்களைச் செய்வதற்கு இந்த மட்டத்திற்கான கணித அறிவு சற்று விரிவாக மேம்படுத்தப்பட வேண்டும்.

**1.5** கடன் அடிப்படையில் மூலப்பொருள் கொள்வனவுக்கான இரட்டைப் பதிவைப் பதிவு செய்வது இங்கு பரீட்சிக்கப்பட்டது. குறிப்பிடத்தக்க அளவு பரீட்சார்த்திகள் இரட்டைப் பதிவைச் சரியாக அடையாளம் கண்டிருந்ததுடன் மிகச் சில பரீட்சார்த்திகள் தேவையான இரட்டைப் பதிவை அடையாளம் கண்டிருக்கவில்லை.

**1.6** இங்கு பங்குடமை கட்டளைச் சட்டம் 1890 இன் பிரிவு 24 இன் ஏற்பாடுகளைக் குறிப்பிடும்படி கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்தனர்.

**1.7** 1890 ஆம் ஆண்டின் பங்குடமை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பங்காளர் ஒருவரின் மூன்று உரிமைளைக் குறிப்பிடும்படி கேட்கப்பட்டது. மேலே வினா இல. 1.6 இல் தரப்பட்ட விடைகளே இந்த வினாவுக்கும் வழங்கப்பட்டிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. ஆனால் இவை இரண்டும் இரு வேறு வினாக்களாக இருப்பதுடன் எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் வேறானதாகும்.

**1.8** நிதிக் கணக்கீடு மற்றும் கிரயக் கணக்கீடு ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடும்படி கேட்கப்பட்டது. குறிப்பிடத்தக்க அளவு பரீட்சார்த்திகள் நிதிக் கணக்கீட்டிற்கும் கிரயக் கணக்கீட்டிற்கும் இடையிலான வேறுபாட்டைச் சரியான அடையாளம் கண்டிருந்ததுடன் ஏனையோர் எதிர்பார்க்கப்பட்ட விடைகளை வழங்கத் தவறியிருந்தனர்.

**1.9** பெறுமதிசேர் வரிக் கட்டுப்பாட்டுக் கணக்கைத் தயாரிக்கும் முறை தொடர்பான பரீட்சார்த்தி களின் அறிவு பரீட்சிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியாக விடை அளிக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் VAT கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவு மற்றும் செலவுப் பதிவுகளை மாற்றி மாற்றிப் பதிவு செய்திருந்தனர்.

**1.10** இவ்வினா துண்டு வீத முறைமையைப் பயன்படுத்தி ஊழியர்களின் மொத்த வருமானத்தைக் கணிப்பிடுவது பற்றிய அறிவைப் பரீட்சித்தது. இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மோசமானதாக இருந்தது. ஊக்கத்தொகைக் கொடுப்பனவைப் பிழையாகக் கணிப்பிட்டதன் காரணமாக அதிகளவான பரீட்சார்த்திகளால் இந்த வினாவுக்கான முழுப் புள்ளிகளையும் பெற்றுக்கொள்ள இயலவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

## <u>பகுதி B</u>

### வினா இல. 02

இவ்வினா பங்குடமைக் கணக்குகள் பற்றிய அடிப்படை அறிவைப் பரீட்சித்தது. இங்கு பங்காளர்களின் மூலதனக் கணக்கு மற்றும் நடைமுறைக் கணக்கைத் தயாரிப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்டது. பங்காளர் கணக்குகள் தொடர்பாக அடிப்படை அறிவு மாணவர்களிடம் போதியளவு இல்லாமை அவதானிக்கப்பட்டது. மூலதனக் கணக்குகள் மற்றும் நடைமுறைக் கணக்குகளின் பதிவுகள் பற்றி தெளிவான புரிதலை பரீட்சார்த்திகள் கொண்டிருக்கவில்லை. எனவே, பல மாணவர்கள் சீராக்கல்கள் மற்றும் குறிப்புகளை மாற்றி மாற்றி மேற்கொண்டிருந்தனர். பின்வரும் பொதுவான தவறுகள் அவதானிக்கப்பட்டன:

- சில பரீட்சார்த்திகள் நன்மதிப்பையும் சொத்துக்களின் மீள்மதிப்பீட்டு இலாபத்தையும் பங்காளர் மூலதனக் கணக்கில் சீராக்கம் செய்வதற்குப் பதிலாக நடைமுறைக் கணக்கில் சீராக்கம் செய்திருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள் மூலதனம் மீதான வட்டி மற்றும் சம்பளத்தை பங்காளர் மூலதனக் கணக்கில் பதிவு செய்திருந்தனர்.
- பங்காளரின் ஓய்வு, விசேடமாக அவருடைய நடைமுறைக் கணக்கை மூடுதலும் அதனை மூலதனக் கணக்கிற்கு மாற்றுதலும், அவருக்குச் செலுத்த வேண்டிய தொகையை கடன் கணக்கு ஒன்றிற்கு மாற்றுதல் போன்றவற்றுடன் தொடர்புடைய சீராக்கங்களை சில பரீட்சார்த்திகள் மேற்கொண்டிருக்கவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 03**

இவ்வினா தனியுடமையாளர் ஒருவர் தொடர்பில் தரப்பட்ட பூரணமற்ற நிதித் தகவல்களைக் கொண்டு பரீட்சை மீதியைத் தயாரிக்கும் அறிவைப் பரீட்சித்திருந்தது. இங்கு அதிகளவான பரீட்சார்த்திகள் எடுப்பனவுகள், கொள்வனவுச் சீராக்கங்கள், ஆரம்ப இருப்பும் இறுதி இருப்பும் (விற்பனைக் கிரயம்) ஆகியன பற்றி முறையான புரிதலைக் கொண்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. மேலும், அதிகளவான பரீட்சார்த்திகள் ஆரம்ப மூலதனத்தைச் சரியாக இனங்காணத் தவறியிருந்ததுடன், சில பரீட்சார்த்திகள் பரீட்சை மீதிக்குப் பதிலாக நிதி நிலைக் கூற்று மற்றும் வருமானக் கூற்று என்பவற்றைத் தயாரித்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்படவில்லை.**

**வினா இல. 04**

இவ்வினா இலாப நோக்கற்ற நிறுவனத்திற்கான வருமானக் கூற்றைத் தயாரிப்பது பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்ததுடன் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், கோட்பாட்டு ரீதியான போதிய அறிவு இன்மையால் சில தோல்வியடைந்த பரீட்சார்த்திகள் அங்கத்துவக் கணக்கை தயாரித்திருக்கவில்லை. மேலும், விளையாட்டு உபகரணங்கள் மீதான தேய்மானமானது வருமான, செலவினக் கணக்கில் சரியாக சீராக்கம் செய்யப்படவில்லை என்பதுடன் மொத்த அங்கத்துவ வருமானமும் சரியாக கணிப்பிடப்படவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 05**

**(a)** இவ்வினா மொத்தக் கிரயக் கணிப்பீடு பற்றிய அறிவைப் பரீட்சித்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் ஒதுக்கப்பட்ட 5 புள்ளிகளையும் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகளிடம் மொத்தக் கிரய எண்ணக்கரு பற்றிய முறையான புரிதல் காணப்படவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

**(b)** இவ்வினா கிரயக் கணக்கீட்டிற்கும் நிதிக் கணக்கீட்டிற்கும் இடையிலான இலாப இணக்கக் கூற்று பற்றிய அறிவைப் பரீட்சித்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சிக்கவில்லை என்பதுடன் பூரணமான விடையையும் அளித்திருக்கவில்லை. அதிகளவான பரீட்சார்த்திகளிடம் இலாப இணக்கம் பற்றிய எண்ணக்கரு மீது முறையான புரிதல் காணப்படாமை அவதானிக்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் கணக்கிணக்கத்திற்குப் பதிலாக கிரயக் கணக்கீட்டிற்கும் நிதிக் கணக்கீட்டிற்கும் இடையிலான கணித ரீதியான வேறுபாடுகளைக் காட்டியிருந்தனர். பெரும்பாலானவர்கள் இலாப கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிக்கும் போது, தவறாக ஆரம்ப இருப்பு மற்றும் இறுதி இருப்பை சீராக்கம் செய்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருக்கவில்லை.**

**வினா இல. 06**

இவ்வினா மேந்தலைகளின் ஒதுக்கீடு பற்றிய அடிப்படை அறிவைப் பரீட்சித்திருந்தது. இதன் **பகுதி (a)** ஆனது தரப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி மேந்தலை ஒதுக்கீட்டுக் கூற்றினைத் தயாரிக்குமாறு தேவைப்படுத்தியது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் **பகுதி (a)** இற்கு திருப்திகரமான மட்டத்தில் விடையளித்திருந்தனர். **பகுதி (b)** மற்றும் **பகுதி (c)** இற்கான செயலாற்றுகை திருப்திகரமானதாக அமைந்திருக்கவில்லை. அதிகளவான பரீட்சார்த்திகள் பொதியிடல் திணைக்களத்திற்கான நேர் கூலிக்கான மேந்தலை உறிஞ்சல் வீதத்தைச் சரியாகக் கணிப்பிடத் தவறியிருந்தனர். இதனால் தொற்றுநீக்கல் திரவப் போத்தலின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் சரியாகப் பெறப்படவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருக்கவில்லை.**

## <u>பகுதி C</u>

**வினா இல. 07**

இவ்வினா வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றின் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பைப் பரீட்சித்திருந்ததுடன் இது (a), (b) என இரு பகுதிகளை உள்ளடக்கியிருந்தது. பகுதி (a) ஆனது முற்றடக்க வருமானக் கூற்றின் தயாரிப்பையும் பகுதி (b) ஆனது நிதி நிலைக் கூற்றின் தயாரிப்பையும் பரீட்சித்திருந்தது.

அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தாலும் மிகச் சில பரீட்சார்த்திகளே முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன :**

**(a) முற்றடக்க வருமானக் கூற்றின் தயாரிப்பு:**

(1) முற்றடக்க வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய உருப்படிகள் பற்றி போதிய அறிவின்மையால், சிலர் காணி, கட்டடம், மோட்டார் வாகனம் மற்றும் அலுவலக உபகரணம் போன்ற நிதி நிலைக் கூற்றில் பதிவு செய்யப்பட வேண்டிய உருப்படிகளை அதில் பதிவு செய்திருந்தனர்.

(2) வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைக் கூற்றிற்கென பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவங்களை சில பரீட்சார்த்திகள் பின்பற்றியிருக்கவில்லை.

(3) பெரும்பாலான பரீட்சார்த்திகள் தங்களுடைய செய்கை வழிகளில் வருமான வரி சீராக்கத்தைக் காட்டியிருக்கவில்லை. அவர்களில் அதிகமானவர்கள் ஆண்டிற்கான சரியான வருமான வரித் தொகையைக் கணிப்பிட்டிருக்கவில்லை.

(4) தனிச்ச வட்டி மற்றும் விற்பனைப் பணிசை என்பன செலவினங்களாக இருந்த போதிலும், சிலர் அதனை வேறு வருமானமாகக் கருதியிருந்தனர்.

(5) அதிகமான பரீட்சார்த்திகள் தனிச்ச வட்டியைச் சரியாகக் கணிப்பிடவில்லை. அவர்கள் வருடாந்த வட்டியைக் கணிப்பிடாததுடன் செலுத்திய தனிச்ச வட்டியை மாத்திரம் கருத்திற் கொண்டிருந்தனர்.

(6) ஐயக் கடன்களுக்கான 10% பொது ஏற்பாடு அறவிடமுடியாக் கடன் தொகையான ரூபா 2,300,000/- இனைக் கழித்த பின்னர் எஞ்சிய வியாபார வருமதிகள் மீதியில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற போதிலும், சிலர் அதனைத் தவிர்த்து, வியாபார வருமதிகளின் மொத்தப் பெறுமதியில் ஐயக்கடன் ஏற்பாட்டைச் செய்திருந்தனர்.

(7) அட்டுறுக்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள் என்பன சில பரீட்சார்த்திகளால் நிதிக் கூற்றுக்களில் முறையாகக் காட்டப்படவில்லை.

(8) சில பரீட்சார்த்திகள் ஆண்டிற்கான தேய்மானத்திற்குப் பதிலாக வருமானக் கூற்றிலிருந்த திரள் தேய்மானத்தை உள்ளிட்டிருந்தனர்.

(9) சில பரீட்சார்த்திகள் செய்கை வழிகளை இணைத்திருக்கவில்லை என்பதால் செய்கை வழிகளுக்காக ஒதுக்கப்பட்ட புள்ளிகளை அவர்களால் பெற இயலவில்லை.

(10) அதிகளவான பரீட்சார்த்திகள் இறுதித் தொக்கு சீராக்கத்தை சரியாக சீராக்கம் செய்திருக்கவில்லை.

(11) அதிகளவான பரீட்சார்த்திகள் தளபாடம் மீதான தேய்மானத்தைச் சரியாகக் கணிப்பிடவில்லை. அவர்கள் தளபாடம் கொள்வனவு செய்யப்பட்ட திகதியைக் கருத்திற் கொள்ளாது வருடாந்த தேய்மானத்தைக் கருத்திற் கொண்டிருந்தனர்.

(12) நிருவாகச் செலவினம் மற்றும் விநியோகச் செலவினங்களுக்கான விபரமான செய்கை வழிகளைச் சில பரீட்சார்த்திகள் காட்டியிருக்கவில்லை.

(13) சில பரீட்சார்த்திகள் சில பெறுமானங்களை ஆயிரங்களில் காட்டியிருந்ததுடன் சில பெறுமானங்களை ஆயிரங்களில் காட்டாது நிஜப் பெறுமானங்களில் எழுதியிருந்தனர்.

**(b) நிதி நிலைக் கூற்றின் தயாரிப்பு:**

**(1)** சில பரீட்சார்த்திகள் கட்டட தேய்மானத்தைக் கணிப்பிடும்போது காணிப் பெறுமதியைக் கழித்திருக்கவில்லை.

**(2)** அட்டுறு மின்சாரம், முன்செலுத்திய பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புக்கான தொகை என்பன நிதி நிலைக் கூற்றில் சரியாகப் பதிவு செய்யப்படவில்லை.

**(3)** அறவிடமுடியாக் கடன் பதிவழிப்பு மற்றும் ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு என்பன சரியாகக் கணிப்பிடப்படவில்லை. சில பரீட்சார்த்திகள் அறவிடமுடியாக் கடன் பதிவழிப்புத் தொகையை மாத்திரம் கழித்திருந்ததுடன் ஐயக் கடன் ஏற்பாட்டுத் தொகையை காட்டாது விட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் அறவிடமுடியாக் கடன் பதிவழிப்புத் தொகையைக் கழிக்காது ஐயக்கடன் ஏற்பாட்டுத் தொகையை மாத்திரம் கணிப்பிட்டிருந்தனர்.

**(4)** சில பரீட்சார்த்திகள் காணி மற்றும் கட்டடத்திற்கான திரள் தேய்மானப் பெறுமதியைச் சரியாகக் காட்டியிருக்கவில்லை.

**(5)** அதிகளவான பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய வருமான வரித் தொகையைச் சரியாகக் காட்டியிருக்கவில்லை.

**(6)** அதிகளவான பரீட்சார்த்திகள் கைக்கொள் இலாபத்திலிருந்து 10,000,000 இனை பொது ஒதுக்கத்திற்குச் சரியாக மாற்றியிருக்கவில்லை. அவர்கள் அதனை பங்கு மூலதனத்திலிருந்து கழித்திருந்தனர்.

**(7)** அதிகளவான பரீட்சார்த்திகள் சேதமடைந்த தொக்கின் பெறுமதியை இறுதித் தொக்கிலிருந்து கழித்திருக்கவில்லை.

**(8)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் செலுத்திய இடைக்காலப் பங்கிலாபத்தைச் சரியாக சீராக்கம் செய்திருக்கவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

- - -

**<u>பரீட்சையில் செயல்திறனை மேம்படுத்தும் பொருட்டு பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை அதிகரிப்பதற்கான பரிந்துரைகள்</u>:**

(1) பரீட்சார்த்திகள் பாடப் புத்தகத்தை நன்றாகப் படித்து அதன் உள்ளடக்கத்தை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

(2) செயல் வினைச்சொற்களின் வரைவிலக்கணங்களைப் புரிந்துகொண்டு, வினாத்தாளின் இறுதியில் தரப்பட்டுள்ள செயல் வினைச்சொல் செவ்வை நிரலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்துப் பழகிக் கொள்ளுதல் வேண்டும்.

(3) கடந்தகால வினாத்தாள்களின் உள்ளடக்கத்தைப் படிப்பதுடன் ஆகக்குறைந்தது கடந்த 2 – 3 பரீட்சை வினாத்தாள்களில் பயிற்சி பெறுவதுடன் வினாக்கள் எந்த வழிமுறையில் அமைக்கப்படுகின்றன என்பதையும் புரிந்துகொள்ள முயற்சித்தல் வேண்டும்.

(4) பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு முன்னராக நேர அடிப்படையில் கடந்தகால வினாத்தாள்களைச் செய்து பார்க்க வேண்டும். இது பரீட்சையில் நேர முகாமைத்துவத்தை மேம்படுத்தும்.

(5) பரீட்சார்த்திகள் பரீட்சையில் நேர்த்தியான கையெழுத்தில் எழுதுதல் வேண்டும்.

(6) பரீட்சார்த்திகள் வினாத்தாளிற்கு விடையளிக்க ஆரம்பிப்பதற்கு முன்னர் வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை கவனமாக வாசித்தல் வேண்டும்.

(7) பரீட்சார்த்திகள் வினாவை விளங்கிக்கொண்டு, பொருத்தமானதும் துல்லியமானதுமான விடைகளை வழங்கும் பொருட்டு தமது மனதைத் தெளிவாகவும் சமநிலையிலும் வைத்திருத்தல் வேண்டும்.

(8) பரீட்சார்த்திகள் தரப்பட்ட புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கான நேர ஒதுக்கீட்டை மேற்கொள்ள வேண்டும், இதனால் பரீட்சார்த்திகள் தரப்பட்ட சகல வினாக் களுக்கும் பயனுறுதிமிக்க வகையில் விடையளிக்க இயலுமாக இருக்கும்.

(9) தேவைப்படுத்தப்பட்ட சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்பட்டுள்ளதா என்பதையும் பொருத்தமாக இலக்கமிடப்பட்டுள்ளதா என்பதையும் விடைத்தாள்களைக் கையளிப்பதற்கு முன்னர் இரு தடவைகள் சோதித்துக் கொள்ளுதல் வேண்டும்.

- * * * -